# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,423 — 1958 ජූලි 11 වැනි සිකුරාද — 11.7.1958

11,423 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு ஆடி மாதம் 11 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) — பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அறிவித்தல்

**சம்பளப் பதவி நிர்ணய அதிகாரசபை**

அரசாங்க ஊழியர்களதும் உதவி பெறும் பாடசாலை ஆசிரியர்களதும் சம்பளங்கள், படிகள் என்பனபற்றியும் அவர்களின் ஏனைய வேலை நிலைமைகள் பற்றியும் இவ்வதிகாரசபைக்கு எடுத்துக்காட்ட விரும்புவோர் அவ்வாறு செய்யவேண்டும் என்று 1958 ஆம் ஆண்டு ஜூன் மாதம்12 ஆம் 16 ஆம் திகதிகளில் தினசரிப் பத்திரிகைகளிலும் 1958 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 ஆம் திகதியைக்கொண்ட அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையிலும் ஒரு அறிவித்தல் வெளியானது.

குறித்த விடயங்கள் சம்பந்தமாக எடுத்துக்காட்டுவதற்கு மேலும் அவகாசம் கொடுக்கவேண்டும் என்று பலர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அதற்கான திகதியை 1958 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21 ஆம் திகதியிலிருந்து 1958 ஆம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 5 ஆம் திகதிவரை அதிகாரசபை மனமுவந்து நீடித்திருக்கிறது.

என். ஜே. எல். ஜான்ஸ்,
செயலாளர்.

1958 ம் ஸ்ரீ ஜூலைமீ 4 ந் உ.

சம்பளப் பதவி நிர்ணய அதிகாரசபை,
127, மக்கார்தி வீதி,
கொழும்பு 7.

---

L. D. — B. 26/48.

### அறிவித்தல்

**1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சம்பளத் தீர்ப்புச் சங்கச் சட்டம்**

1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சம்பளத்தீர்ப்புச் சங்கச் சட்டத்தின் 28 ம் பிரிவின் பிரகாரம் இயந்திரத் தொழிற் சம்பளத்தீர்ப்புச் சங்கத்திற் களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டவாறு, அவ்வட்டவணையிற் குறிக்கப்பட்ட குறித்த சங்கத்தின் தீர்மானங்களை அச்சங்கம் மாற்ற உத்தேசிக்கிறதென்று 1943 ம் ஆண்டின் 40 ம் இலக்க சட்டத்தாலும், 1953 ம் ஆண்டின் 5 ம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தியமைக்கப்பட்ட மேற்கூறிய சட்டத்தின் 26A ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறிய யோசனைக்கு ஆட்சேபனைகள் 1958 ம் ஆண்டு ஜூலை மாதம் 28 ந் திகதி பகல் 12 மணிவரைக்கும் சங்கத்தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் தெரிவிக்கப்படுவதோடு அவ்விதம் ஆட்சேபித்தற்கான காரணங்களைக் கூறும் ஓர் அறிக்கையைக் கொண்டதாயிருத்தல் வேண்டும்.

சா. ப. குமாரசிங்க,
இயந்திரத் தொழிற் சம்பளத்தீர்ப்புச் சங்கத்தலைவர்.

கொழும்பு,
1958 ம் ஸ்ரீ ஜூலைமீ 5 ந் உ.

அட்டவணை

இயந்திரத் தொழிற் சம்பளத்தீர்ப்புச் சங்கத்தால் ஆக்கப்பட்டு, 1945 ம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 10 ந் திகதி வெளிவந்த 9,447 ம் இலக்கக் "கெசெற்"றில் பிரசுரமான அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டு, 1946 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 22 ந் திகதி வெளிவந்த 9,523 ம் இலக்க "கெசற்" றிலும் 1948 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 27 ந் திகதி வெளிவந்த 9,837 ம் இலக்க "கெசெற்" றிலும், 1951 ம் ஆண்டு மார்ச் மாதம் 30 ந் திகதி வெளிவந்த 10,229 ம் இலக்க விசேஷ "கெசெற்" றிலும், 1953 ம் ஆண்டு ஜூன் மாதம் 29 ம் தேதி வெளிவந்த 10,542 ம் இலக்க விசேஷ "கெசெற்"றிலும், 1955 ம் ஆண்டு ஜூன் மாதம் 30 ந் திகதி, வெளிவந்த 10,811 ம் இலக்க விசேஷ "கெசெற்" றிலும், 1957 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 27 ந் திகதி வெளிவந்த 11,224 ம் இலக்க "கெசெற்" றிலும், 1958 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 28 ந் திகதி வெளிவந்த 11,268 ம் இலக்க "கெசெற்" றிலும் பிரசுரமான அறிவித்தல்களிற் குறிக்கப்பட்டவாறு மாற்றப்பட்ட தீர்மானங்கள் அவ்வட்டவணையின் II ம் பாகத்தில் "தொழிலாளிகளில் வகுப்பு" என்ற தலைப்பின் கீழ் மேலும் பின்வருமாறு மாற்றப்படுகின்றன :—

(அ) "அரைத் தேர்ச்சி பெற்ற தொழிலாளிகள் இனம் 1" என்ற உபதலைப்பின் கீழ் "பாரந்தூக்கும் இயந்திரம் செலுத்துவோர்" என்ற விடயத்தை விடுத்தும் ;

(ஆ) "தேர்ச்சி பெற்ற தொழிலாளிகள்" என்ற உபதலைப்பின் கீழ் "கடையாணி இறுக்குவோரும் ஒட்டை சரிப்பண்ணுவோரும்" என்ற விடயத்திற்குப் பதிலாக "கடையாணி இறுக்குவோரும் கலப்பற்றுக் கயிறிடுவோரும் (Caulkers) பாரந்தூக்கும் இயந்திரம் செலுத்துவோர்" என்ற விடயங்களை இட்டும்.

---

## நானாவித அறிவித்தல்கள்

### அறிவித்தல்

**இசால உற்சவம் கதிர்காமம்—1958**

1948 ம் ஆண்டு சித்திரை மாதம் 30 ந் திகதியையும், 1949 ம் ஆண்டு ஆடி மாதம் 22 ந் திகதியையும், 1958 ம் ஆண்டு மாசி மாதம் 7 ந் திகதியையும் கொண்ட 9,859, 10,000, 11,255 ம் இலக்கங்களையுடைய அரசாங்க "கெசெற்" பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கதிர்காம, செல்லக் கதிர்காம யாத்திரை கட்டுப்பாடுகளைப் பற்றியன பொது சனங்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது.

இது சம்பந்தமாக பொது சனங்களுக்கு அறியத் தருவது என்னவென்றால் :

(அ) தற்காலிகக் கட்டிடங்கள் ஏதேனும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் அனுமதியில்லாமல் கதிர்காம, செல்லக்கதிர்காம பாடி எல்லைக்குள் கட்டக்கூடாது.

(ஆ) கீழ் குறிக்கப்பட்ட இடங்களில் தற்காலிக வியாபார ஸ்தானங்கள் கட்ட உத்தரவு கொடுக்கப்படமாட்டாது :—

(1) பெரிய வீதி,
(2) பின் வீதி,
(3) பின் வீதிக்கும் நாகா வீதிக்கும் உட்பட்ட புத்தள றேட்டு,
(4) பெரிய வீதியையும் பின் வீதியையும் தொடுக்கும் றேட்டு,
(5) சுப்பிரமணியர் கோவிலுக்கும் அருகாமையிலுள்ள நிலம்.

(இ) பாடி எல்லைக்குள் சிமந்தி பாலத்திற்குக் கீழ்ப்பட்ட இடத்தைத் தவிர மற்ற இடங்களில் ஆற்றிலிருந்து 100 யாருக்கு உட்பட பாபர் சாப்புகள் வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

(ஈ) மாடுகள் குளிப்பாட்டும் இடத்திற்குக் கீழ், ஆற்றில் குளிக்கவோ தண்ணீர் அள்ளவோ எவரும் அனுமதிக்கப்படமாட்டார். நோய் பரவுதலைத் தடுப்பதற்காக சனங்கள் ஆற்றில் குடிக்க, குளிக்க, மாடுகள் குளிக்க, குடிக்க பிரத்தியேகமாக குறிக்கப்பட்ட இடங்களிலேயிருந்து தண்ணீரைப் பாவிக்க வேண்டும்.

(உ) ஒரு விதமான மோட்டார் வண்டிகளாவது, மாட்டு வண்டிகளாவது பைசிக்களாவது பாடி எல்லைக்குள் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரின் உத்தரவின்றி கொண்டுவர அனுமதிக்கப்படமாட்டாது.

(ஊ) ஒரு விதமான தற்காலிகக் கட்டிடங்கள் செல்லக்கதிர்காம ஆற்றங் கரையிலிருந்து 30 யாருக்குள் கட்டப்பட அனுமதிக்கப் படமாட்டாது.

எவராகுதல் மேற் குறிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு மீறி நடந்தால் அவர்களுக்கெதிராக வழக்குத் தொடரப்படும்.

பீ. பி. வி. ஏ. ஜே. பி. சேனுரட்ன,
வதுளை மாவட்ட அதிகாரி.

வதுளைக் கச்சேரி,
1958 ம் ஏப்ரல் மீ 20 ந் உ.

## அறிவித்தல்

### இசால உற்சவம் கதிர்காமம்—1958

வதுளை மாவட்டம் அதிபர் பீ. பி. வி. ஏ. ஜே. பி. சேனுரட்ன ஆகிய நான் 1948 ம் ஆண்டு சித்திரை மாதம் 30 ந் திகதி, பிரசுரித்த 9,859 ம் இலக்க அரசினர் " கெசெற் " பத்திரிகையில் 1948 ம் ஆண்டு சித்திரை மாதம் 16 ந் திகதி இட்ட கதிர்காமம், செல்லக்கதிர்காமம் யாத்திரை களுக்கென விதிக்கப்பட்ட பிரமாணங்களின் 10 (1) உப விதிப்பிரகாரம் பின்வரும் இடங்களை யாத்திரிகர்களுக்கு உணவு விநியோகிக்கவும் விற்கவும் நியமிக்கிறேன் :—

(1) பெரிய வீதியிலும், புற வீதியிலுமுள்ள உத்தரவு பெற்ற நிரந்தரக் கட்டிடங்கள்.

(2) உத்தரவு பெற்ற நிரந்தரக் கட்டிடங்களும் எம் அங்கீகாரத்துடன் பின்வரும் வீதிகளில் முன் வாசல் உள்ளவையுமான தற்கா லிகக் கட்டிடங்கள்.

(அ) நாகா வீதி.

(ஆ) கட்டகமுவ வீதியில் திஸ்ஸ–கதிர்காம வீதி சந்திக்கு மிடத்திற்குத் தெற்கே.

(இ) திஸ்ஸ-கதிர்காம பொது வேலைத்துறை வீதியில் கட்ட கமுவ வீதி சந்திக்குமிடத்திற்கு வடக்கே.

(3) எம் உத்தரவிற்கமைய தெய்வானை அம்மன் கோயில் நிலங் களுக்குள் அமைத்த நிரந்தர கட்டிடங்கள் மட்டும்.

(4) எம் உத்தரவுபெற்று செல்லக்கதிர்காமத்தில் அமைக்கப்பட்ட அனுமதிபெற்ற நிரந்தர தற்காலிகக் கட்டிடங்கள்.

(5) நாகா வீதியோடு புத்தளை வீதி சந்திக்குமிடத்திற்கு வடக்குப் பாகமாயுள்ள நிரந்தர தற்காலிகக் கட்டிடங்கள்.

(6) நிரந்தர கட்டிடங்களும் கிரிவெஹெர மழுவையிலிருந்து கிரி வெஹெர வீதி முகமாயிருக்கும் சுற்றுப்பயண வங்களா கம்பியினுல் மறைக்கப்பட்ட ஸ்தானங்கள்.

இந்த அறிவித்தலின் பிரகாரம் வீதியின் மத்தியிலிருந்து 50 அடிக்குக் குறைய முன் வாசலமைந்த எக்கட்டிடமும் அவ்வீதியிலுள்ள கட்டிடமெனக் கருதப்படும்.

கதிர்காமம் அல்லது செல்லக்கதிர்காம விழா வீதியில் வேறு எவ்விடத் திலும் எவ்வகை உணவு அல்லது பானமோ விற்பனை அல்லது விநி யோகம் செய்தலோ கூடாது.

பீ. பி. வி. ஏ. ஜே. பி. சேனுரட்ன,
வதுளை மாவட்டம் அதிபதி.

வதுளைக் கச்சேரி,
1958 ம் ஏப்ரல் மீ 20 ந் உ.

## அறிவித்தல்

### இசால உற்சவம் கதிர்காமம்—1958

வதுளை மாவட்டம் அதிபர் பீ. பி. வி. ஏ. ஜே. பி. சேனுரட்ன ஆகிய நான் 1948 ம் ஆண்டு சித்திரை மாதம் 30 ந் திகதி, பிரசுரித்த 9,859 ம் இலக்க அரசினர் " கெசெற் " பத்திரிகையில் 1948 ம் ஆண்டு சித்திரை மாதம் 16 ந் திகதி, இட்ட கதிர்காமம், செல்லக்கதிர்காமம் யாத்திரை களுக்கென விதிக்கப்பட்ட பிரமாணங்களின்படி பின் வரும் இடங்களில் அப்பிரமாணங்களுக்கமைய எல்லா வித பண்டங்களும் விற்பனை செய்யலாமென நியமிக்கிறேன் :—

(1) பெரிய வீதி, புற வீதி, அவ்வீதிகளை இருமுடிவிலும் இணைக்கும் வீதிகளும் உள்ள நிரந்தரமான கட்டிடங்கள்.

(2) நாகா வீதியிலுள்ள கட்டிடங்கள்.

(3) புத்தள வீதியில் நாகா வீதியைச் சந்திக்குமிடத்திற்கு வடக்கே யுள்ள கட்டிடங்கள்,

(4) கட்டகமுவா வீதியில், திஸ்ஸ-கதிர்காமம் பொது வேலைத்துறை வீதியைச் சந்திக்குமிடத்திற்கு தெற்கேயுள்ள கட்டிடங்கள்.

(5) திஸ்ஸ–கதிர்காமம் பொது வேலைத்துறை வீதியில் கட்டகமுவா வீதி சந்திக்கு வடக்கேயுள்ள கட்டிடங்கள்.

(6) செல்லக் கதிர்காமத்திலுள்ள நிரந்தரக் கட்டிடங்கள்.

(7) செல்லக்கதிர்காமத்தில் அதிகாரமுள்ள ஒரு உத்தியோகத்தரின் அனுமதியுடன் கட்டப்பட்ட தற்காலிகக் கட்டிடங்கள்.

(8) கிரிவெஹெர மளுவையிலிருந்து கிரிவெஹெர வீதி முகமா யிருக்கும் சுற்றுப்பயண வங்களா கம்பியினுல் மறைக்கப்பட்ட ஸ்தானங்கள்.

இந்த அறிவித்தலின் பிரகாரம் வீதியின் மத்தியிலிருந்து 50 அடிக்குக் குறைய முன் வாசலமைந்த எக்கட்டிடமும் அவ்வீதியிலுள்ள கட்டிடமெனக் கருதப்படும்.

மேற்படி இடங்களில் தவிர விழா வீதிகளில் வேறு எவ்விடத்திலும் வியாபாரம் அனுமதிக்கப்படமாட்டா.

பீ. பி. வி. ஏ. ஜே. பி. சேனுரட்ன,
வதுளை மாவட்டம் அதிபதி.

வதுளைக் கச்சேரி,
1958 ம் ஏப்ரல் மீ 20 ந் உ.

## வடமாகாணப் பிரமாணங்கள்

1958 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 18 ந் திகதியின் இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 1958 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 21 ந் திகதியின் " டெயிலி நியூஸ் ", " வீரகேசரி " ஆகிய பத்திரிகைகளிலும் மேற்கூறிய தலையங்கத்தின் கீழ் வெளியான அறிவித்தல் சார்பாக, அபிப்பிராயங்களை யிட்ட ஆய்வுகள், விரைவில் அறிவிக்க விருக்கும் திகதி யொன்றில் நடாத்தப்படும்.

டி. ரீ. ஈ. ஏ. டீ பொன்சேக்கா,
கடற்றெழில் அதிபர்.

கொழும்பு,
1958 ம் ஜூலை மீ 8 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.